Register No. | | | | | | | | |

**TLH**

**5030–21**

(For the candidates admitted from 2009-2010 to 2016-2017)

**B.L./LL.B. DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Three-year Regular Course)

Third Year – Sixth Semester

**INTELLECTUAL PROPERTY LAW**

Time : Three hours Maximum : 100 marks

**PART A** — (3 × 12 = 36 marks)

**Answer THREE of the following in not exceeding SIX pages each.**

பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

1. Define Copyright and explain the remedies available in case of infringement of copyright under the Copyright Act, 1957.

   பதிப்புரிமை என்பதனை வரையறை செய்து 1957–ஆம் ஆண்டு பதிப்புரிமை சட்டத்தின் கீழ் பதிப்புரிமை மீறலுக்கு எதிரான தீர்வழிகள் என்னவென்று எடுத்துரைக்கவும்.

2. What is Patent? What are the rights and obligations of a patentee?

   காப்புரிமை என்றால் என்ன? காப்புரிமை பெற்றவரின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் யாவை?

3. Define "Infringement of trademark" and explain what acts do not constitute infringement of trademark.

   ''வணிக முத்திரை உரிமை மீறல்'' என்பதை வரையறை செய்து எந்த செயல்கள் வணிக முத்திரை உரிமை மீறல் ஆகாது என விளக்கவும்.

4. What is "Industrial Design"? What are the remedies available for the infringement of industrial design?

   தொழிலக வடிவமைப்பு என்றால் என்ன? தொழிலக வடிவமைப்பு உரிமை மீறலுக்கு உண்டானத் தீர்வழிகள் யாவை?

5. Define Intellectual Property. Discuss the subject matter that comes under Intellectual property according to the Indian Patent Act.

   அறிவுசார் சொத்துக்கள் என்பதை வரையறு. இந்திய காப்புரிமை சட்டத்தில் அறிவுசார் சொத்துக்களின் கீழ் வரக்கூடிய பருப்பொருட்கள் என்னவென்று விவாதிக்கவும்.

## PART B — (8 × 6 = 48 marks)

6. **Write short answers on EIGHT of the following in not exceeding two pages each :**

பின்வருவனவற்றுள் எட்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் குறுகிய விடைகள் எழுதுக :

(a) TRIP's Agreement.
வணிகம் சார்ந்த அறிவுசார் சொத்துரிமை உடன்படிக்கை.

(b) Anton Pillar Order.
ஆண்டன் பில்லர் ஆணை.

(c) Controller of Patents.
காப்புரிமை கட்டுப்பாட்டாளர்.

(d) Confidential Information.
இரகசியத் தகவல்.

(e) Service Mark.
சேவை முத்திரை.

(f) Deceptive Similarity
ஏமாற்றும் அளவில் ஒத்த தன்மை.

(g) Patentable and Non Patentable Inventions.
காப்புரிமை பெறத் தக்க மற்றும் காப்புரிமை பெற இயலாக் கண்டுபிடிப்புகள்.

(h) Trade Secrets.
வணிக இரகசியங்கள்.

(i) Terms of various copyright subject matter.
பல்வேறு பதிப்புரிமைகளின் பாதுகாப்புக் காலம்.

(j) Passing off.
வணிகப் போலி.

## PART C — (4 × 4 = 16 marks)

**Answer FOUR of the following (in not exceeding two pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.**

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Kannan is a famous actor in Tamil films. He wants his performance and style of acting to be copyrighted under the Copyright Act, 1957. Advise him.

கண்ணன் என்ற புகழ்பெற்ற தமிழ்த் திரைப்பட நடிகர் தனது நடிப்பு மற்றும் ஸ்டைல் ஆகியவற்றை பதிப்புரிமைச் சட்டம் 1957யின் கீழ் பதிப்புரிமையாக்கம் செய்ய விரும்புகிறார். அவருக்கு அறிவுரை வழங்குக.

8. Dhinu who is a scientist, invented a new variety of rice. He applied for a patent. Will he succeed in acquiring a patent for a new variety of rice? Decide.

தீனு என்பவர் ஒரு அறிவியலர். அவர் ஒரு புதிய வகை அரிசியை புதிதாக கண்டுபிடிக்கிறார். மேலும் அவர் காப்புரிமை கோரி விண்ணப்பம் செய்கிறார். அவர் தனது புதிய ரக அரிசிக்கு காப்புரிமை பெறுவதில் வெற்றி பெறுவாரா? தீர்மானிக்கவும்.

9. Sumna Company has purchased "VENTO", a registered trademark, from Adidas Company. Sumna Company wants to alter the trade mark. "VENTO". Advise them.

'சும்னா' என்ற நிறுவனம் 'அடிடாஸ்' என்ற நிறுமத்தின் பதிவுபெற்ற வணிக முத்திரையான ''வெண்டோ'' என்ற வணிக முத்திரையை விலைக்கு வாங்குகிறது. பின்னர் சும்னா நிறுமம் 'வெண்டோ' என்ற வணிக முத்திரையில் மாற்றம் செய்ய விரும்புகிறது. அவர்களுக்கு அறிவுரை வழங்குக.

10. 'A', a registered proprietor of a Design, alleges that 'B' unauthorizedly applied his said design and has gained substantially. Discuss the remedies to 'A' under the Designs Act, 2000.

'அ' என்பவர் ஓர் பதிவுப் பெற்ற வடிவமைப்பிற்கான உரிமையாளர் 'அ' என்பவருக்கு எதிராக அவரது வடிவமைப்பை 'ஆ' என்பவர் சட்ட விரோதமாகப் பயன்படுத்தி லாபம் அடைந்துள்ளார் எனக் குற்றம் சுமத்துகிறார். 'அ' என்பவருக்கு வடிவமைப்புச் சட்டம் 2000-ன் கீழ் கிடைக்கக்கூடியத் தீர்வழிகள் என்ன என்று எடுத்துரைக்கவும்.

11. Xavier invented a ball, which instead of falling down on the ground, could be raising up in the air defying the principles of gravity. Is Xavier entitled for a patent for his invention?

சேவியர் என்பவர் பந்து ஒன்றைப் புதிதாகக் கண்டுபிடித்தார். அது கீழே விழுவதற்கு பதிலாக புவிஈர்ப்பு சக்திக்கு மாறாக மேலே எழும்பும் தன்மையுடையது. சேவியர் தனது கண்டுபிடிப்பிற்கு காப்புரிமை கோரத் தகுதியுடையவரா?

12. Deepa invents a product and submits an application for patent along with the model and specification. At the time of testing, her model could not work before the authority. Divya applies for the patent with the same model and specification. It proved success. Decide who is eligible to get patent.

தீபா என்பவர் ஒரு பொருளைப் புதிதாகக் கண்டுபிடித்து அதன் பொருள் மாதிரி மற்றும் விபரக் குறிப்புகளுடன் காப்புரிமை கோரி உரிய அதிகார அமைப்பிடம் விண்ணப்பிக்கிறார். அந்தப் பொருளானது உரிய அதிகாரிகளால் பரிசோதிக்கப்படும் பொழுது சரியாக வேலை செய்யவில்லை. திவ்யா என்பவரும் அதே பொருளைக் கண்டுபிடித்ததாக அப்பொருளின் மாதிரி மற்றும் விபரக் குறிப்புகளுடன் காப்புரிமை கோரி விண்ணப்பம் செய்கிறார். இவரது பொருள் பரிசோதனையின் பொழுது வெற்றி பெறுகிறது. யார் காப்புரிமை பெறத் தகுதி உடையவர்?

---